மாலைக் கதிர் 19.02.2025

# டி.என்.பி.எல்., சார்பில் இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை

**கரூர், பிப். 19–**

புகளூர் டி.என்.பி.எல்., ஆலை சார்பில், பெண்களுக்கு இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம் வரும், 22ம் தேதி வரை நடக்கிறது.

புகளூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில், உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு, ஆலையை சுற்றியுள்ள கிராமங்களில் பெண்களுக்கான இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம் நடந்து வருகிறது. ஆலை குடியிருப்பு வளாகத்தில் பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் முகாமை தொடங்கி வைத்து கூறியதாவது: புற்றுநோய் குறித்த, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் முகாமில் தினமும், 35 பேருக்கு பரிசோதனை நடக்கிறது. 4,000 ரூபாய் மதிப்புள்ள யு.எஸ்.ஜி., பி.ஏ.பி., ஸ்மியர் ரேண்டம் பிளட் சுகர் போன்ற பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படுகிறது. வரும், 22ம் தேதி வரை முகாம் நடைபெறுவதால், பெண்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) வெங்கடேசன், சுகாதார மைய டாக்டர் ராஜா உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்றனர்.

**தினமலர் (18.02.2025)**

# மார்பக புற்றுநோய் கண்டறியும் இலவச பரிசோதனை முகாம்

**வேலாயுதம்பாளையம், பிப். 18–**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தனது சமுதாய பணிகளில் ஒன்றாக, உலக புற்றுநோய் தினமான பிப்ரவரி 4ம் தேதியை அனுசரிக்கும் விதமாகவும், புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் இலவச மருத்துவ முகாமை 6 நாட்கள் நடத்திட ஏற்பாடு செய்துள்ளது.

அதன்படி காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் மற்றும் திருச்சி காவேரி மருத்துவமனை ஆகியவை சார்பில் இலவச மார்பக புற்றுநோய் கண்டறியும் முகாம் நேற்று தொடங்கியது.

முகாமை காகித ஆலை நிறுவன பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தொடங்கி வைத்தார். செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, முதன்மை மேலாளர் (மனிதவளம்) வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நேற்று தொடங்கிய இம் முகாம் வரும் 22ம் தேதி வரை டிஎன்பிஎல் குடியிருப்பு வளாகத்தில் நடமாடும் மருத்துவ பரிசோதனை வாகனத்தில் காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடக்கிறது.

இதில் தினமும் 35 மகளிருக்கு பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ.4 ஆயிரம் மதிப்புள்ள மார்பக புற்றுநோய்க்கான யுஎஸ்ஜி, பாப் ஸ்மியர், பிபி அண்டு ரேண்டம் பிளட் சுகர் பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட உள்ளன.

தினமணி (18.02.2025)

# பெண்களுக்கு இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம்

**கரூர், பிப்.17:** புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் பெண்களுக்கு இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு ஆலையின் சமுதாய பணிகள் திட்டத்தின் கீழ் புகழூர் டிஎன்பிஎல் ஆலை மற்றும் திருச்சி காவேரி மருத்துவமனை சார்பில் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெண்களுக்கான இலவச மார்பக புற்றநோய் பரிசோதனை முகாம் தொடங்கியது.

ஆலையின் குடியிருப்பு வளாகத்தில் பிப். 22-ஆம்தேதி வரை நடைபெற உள்ள முகாமை ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் தொடக்கி வைத்தார்.

பின்னர் அவர் கூறியது, புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் இந்த முகாமில் தினமும் 35 பேருக்கு பரிசோதனை நடைபெறம் முகாமில் ரூ. 4 ஆயிரம் மதிப்புள்ள யுஎஸ்ஜி, பிஏபி ஸ்மியர் மற்றும் ரேண்டம் பிளட் சுகர் போன்ற பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட உள்ளது என்றார் அவர். முகாமில் ஆலையின் முதன்மை மேலாளர்(மனிதவளம்) ஜே. வெங்கடேசன், சுகாதார மைய மருத்துவர் ஏ.கே.கே. ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தினகரன் (19.02.2025)**

### தமிழ்நாடு காகித நிறுவனம் சார்பில்

# மார்பக புற்றுநோய் கண்டறியும் இலவச பரிசோதனை முகாம்



▶ பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் மருத்துவ முகாமை டிஎன்பிஎல் நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், சுகாதார மைய மருத்துவர் ராஜா, முதன்மை மேலாளர் (மனிதவளம்) வெங்கடேசன், மற்றும் காவேரி மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் தொடங்கி வைத்தனர்.

வேலாயுதம்பாளையம், பிப். 19: தமிழ்நாடு செய்தித்தாள் காகிதாலை சார்பில் பல்வேறு சமுதாய பணி செய்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக சமுதாயப் பணிகளில் ஒன்றாக, உலக புற்றுநோய் தினமான பிப்ரவரி 4-ம் தேதியை அனுசரிக்கும் விதமாகவும், புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் மருத்துவ கடந்த 6 நாட்களாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிபுரம் மற்றும் திருச்சி காவேரி மருத்துவமனையுடன் இணைந்து மகளிருக்கு ஏற்படும் மார்பக புற்றுநோய் கண்டறியும் இலவச நடமாடும் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த முகாம் தினசரி காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி நடைபெறுகிறது. நாள் ஒன்றுக்கு 35 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்படவுள்ளது. முகாமில் ரூ.4 ஆயிரத்திற்கான மார்பக புற்றுநோய்க்கான *USG, PAP smear, BP & Random Blood sugar* பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட உள்ளது.மார்பக புற்றுநோய் அறிகுறிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனைகளும் வழங்க உள்ளார்கள். மேலும், புற்றுநோய் அறிகுறிகள் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு தொடர்பான பிரசுரங்களும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக முகாமை டிஎன்பிஎல் நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், சுகாதார மைய மருத்துவர் ராஜா, முதன்மை மேலாளர் (மனிதவளம்) வெங்கடேசன், மற்றும் காவேரி மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவ குழுவினர்கள் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தனர்.

மாலை மலர் 18.02.2025



பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் இலவச பரிசோதனை முகாம் துவக்க விழா நடைபெற்ற போது எடுத்த படம்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# பெண்களுக்கு இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை முகாம்

வேலாயுதம்பாளையம், பிப்.18–

புகழூர் டி.என்.பி.எல். ஆலை சார்பில் பெண்களுக்கு இலவச மார்பக புற்றுநோய் பரிசோதனை நேற்று தொடங்கியது.

உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு ஆலையின் சமுதாய பணிகள் திட்டத்தின் கீழ் புகழூர் டி.என்.பி.எல். ஆலை மற்றும் திருச்சி காவேரி மருத்துவமனை சார்பில் ஆலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெண்களுக்கான இலவச மார்பக புற்றநோய் பரிசோதனை முகாம் தொடங்கியது.

வரும் 22–ந் தேதி வரை நடைபெற உள்ள முகாமை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, முதன்மை மேலாளர் (மனிதவளம்) வெங்கடேசன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெறும் இந்த முகாமில் தினமும் 35 பேருக்கு பரிசோதனை நடைபெறும்.

முகாமில் ரூ. 4 ஆயிரம் மதிப்புள்ள யுஎஸ்ஜி, பிஏபிஸ்மியர் மற்றும் ரேண்டம் பிளட் சுகர் போன்ற பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட உள்ளது.

நிகழ்ச்சியில் காவேரி மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவ குழுவினர், காகித நிறுவன துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி (18.02.2025)



**தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்**

# பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை முகாம்

நொய்யல், பிப்.18-

கரூர் மாவட்டம் புகழூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாயப் பணிகளில் ஒன்றாக, உலக புற்றுநோய் தினத்தை அனுசரிக்கும் விதமாகவும், புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், பெண்களுக்கான மார்பக புற்றுநோய் கண்டறியும் மருத்துவ முகாமினை 6 நாட்கள் நடத்திட ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் திருச்சி காவேரி மருத்துவமனை இணைந்து இந்த இலவச மார்பக புற்றுநோய் கண்டறியும் முகாமினை நேற்று முதல் வருகிற 22-ந் தேதி வரை டி.என்.பி.எல். குடியிருப்பு வாளாகத்தில் நடைபெறுகிறது. காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும். இம்முகாமில் ரூ.4,000 மதிப்புள்ள மார்பக புற்றுநோய்க்கான பல பரிசோதனைகள் இலவசமாக செய்யப்படுகிறது. மேலும் புற்றுநோய் அறிகுறிகள் கண்டறிதல் மற்றும் விழிப்புணர்வு தொடர்பான பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகிறது. முகாமினை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், செய்தொழில் சுகாதார மைய மருத்துவர் ராஜா, முதன்மை மேலாளர் (மனிதவளம்) வெங்கடேசன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். அப்போது காவேரி மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவ குழுவினர் உடனிருந்தனர்.